بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஙல்லாஹுஙத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 22/04/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**இறையச்சத்தின் அனைத்து நுட்பமான வழிகளிலும் அடியெடுத்து வைப்பதிலேயே மனிதனின் எல்லா ஆன்மீக அழகும் அடங்கியிருக்கிறது.**
**இறையச்சத்தின் நுட்பமான வழிகள் என்பது ஆன்மீக அழகின் உன்னதமான வரைபடமும் அழகிய தோற்றமும் ஆகும்.**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ- أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ-

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

இன்றைய நாள்களில் நாம் ரமலான் மாதத்தைக் கடந்து கொண்டிருக்கின்றோம். ஏறக்குறைய இரு அஷ்ராக்கள் (பத்துகள்) முடிந்துவிட்டன. அல்லாஹுஙத் தஆலாவின் அருளால் ஒவ்வொரு நம்பிக்கையாளரும் இந்த மாதத்தில், அதிகமதிகமாக இந்த மாதத்தின் அருள்களிலிருந்து பங்கு பெற முயற்சி செய்கின்றார்.

அல்லாஹுஙத் தஆலா நோன்புகள் கடமையாக்கப்பட்டது பற்றிய கட்டளையின் ஆரம்பத்திலேயே நோன்பின் நோக்கமாக, நோன்புகள் நீங்கள் இறையச்சம் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே உங்கள் மீது கடமையாக்கப்பட்டுள்ளன என்று கூறியுள்ளான். எனவே நாம் நோன்புகளுடன் நமது இறையச்சத்தின் தரத்தையும் உயர்த்துபவர்களாக இருக்கும்போதுதான், எல்லாவித தீமைகளிலிருந்தும் தப்பிப்பதற்காக அல்லாஹுஙத் தஆலாவின் அடைக்கலத்தில் வருவதற்கு முயற்சி செய்யும் போதுதான் நோன்புகள் மற்றும் ரமலானின் அருள்களிலிருந்து நாம் பங்கு பெற முடியும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'நோன்பு ஒரு கேடயமாகும்' என்று கூறியுள்ளார்கள். பெயரளவில் நோன்பு வைப்பது மட்டுமே நமக்குப் போதுமானதா? ஸஹ்ரீ மற்றும் இஃப்தாரீ செய்வது மட்டுமே போதுமானதா? நாம் ஸஹ்ரீ மற்றும் இஃப்தாரீ செய்து விட்டோம் என்ற நமது இந்த அளவு செயல்களால் மட்டுமே நம்மை நோன்பின் கேடயத்தின் பின்னால் கொண்டு வர முடியுமா? இல்லை! மாறாக அதன் நிபந்தனைகளையும் பார்க்க வேண்டியுள்ளது. மேலும் நான் கூறியது போன்று, அடிப்படை நோக்கமாக அல்லாஹுஙத் தஆலா கூறியதாவது; لَعَلَّكُمْ تَتَّقُوْنَ அதாவது, நீங்கள் இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள் என்பதே ஆகும். எனவே நாம் நமது நோன்புகளையும் நமது ரமலானையும் அல்லாஹ்வுக்காக, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக, அதன் நற்கூலியாக அல்லாஹ்வே ஆகக்கூடியதாக இருக்கும் அந்த நோன்புகளாகவும் ரமலானாகவும் ஆக்க வேண்டும் என்றால், பிறகு அதனை இறைவன் நம்மிடம் நாடுகின்ற அந்தத் தரத்திற்கு கொண்டு வர வேண்டும்.

நாம் நம்மை நம்பிக்கையாளர் என்று கூறுகின்றோம். முஸ்லிம் என்று கூறுகின்றோம். நாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது வழிகாட்டலின் படி

செயல்பட்டு அன்னார் மீது முழுமையான நம்பிக்கை கொண்டவாறு அன்னாரது முன்னறிவிப்பிற்கு ஏற்ப வர இருந்த மஸீஹ் மற்றும் மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களது வடிவில் வந்துவிட்டார்கள். மேலும், தற்போது இஸ்லாமிய மார்க்கத்தின் மறுமலர்ச்சி பணிகள் அல்லாஹுத்தஆலாவின் வாக்குறுதிக்கு ஏற்ப இந்த மஸீஹ் மற்றும் மஹ்தி அவர்களது கைகளாலேயே நடைபெறும் என்பதையும் ஏற்றுக் கொண்டுள்ளோம் என வாதம் புரிகிறோம். நம்மில் இஸ்லாத்தின் உண்மையான ஆன்மாவை நிலைபெறச் செய்வதற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் இருந்தே வழிகாட்டலைப் பெறவேண்டியது நமது கடமையாகும்.

எனவே இறையச்சம் தொடர்பாக அன்னார் என்ன வழிகாட்டல்களை வழங்கியுள்ளார்கள் என்று நான் பார்க்கும் போது, இறையச்சம் என்றால் என்ன? என்ற இந்தக் கருத்தும் நமக்குத் தெரிய வருகிறது. நான் கூறியது போன்று, நாங்கள் முஸ்லிம்கள் என்றும் நம்பிக்கையாளர்களைச் சார்ந்தவர்கள் என்றும் நாம் வாதிக்கின்றோம். எனவே **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** அவ்வாறெனில் கேளுங்கள்! **ஈமானின் முதல் படித்தரம் மனிதன் இறையச்சத்தை பெறுவதே ஆகும்.**

**பிறகு கூறுகிறார்கள்:** இறையச்சம் என்றால் என்ன? அதற்கான பதில் யாதெனில், எல்லா விதமான தீமையில் இருந்தும் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளுதல் ஆகும். தற்போது நாம் ஆராய்ந்து பார்த்தோம் என்றால், இது சாதாரண விஷயம் ஒன்றுமில்லை. நமது ஆராய்ச்சியிலிருந்தே, நாம் இறையச்சத்தின் உரிமையை செலுத்தியவாறு அல்லாஹ்வின் உரிமைகளை வழங்குகிறோமா? இறையச்சத்தின் படி சென்றவாறு அல்லாஹுத்தஆலாவின் படைப்பினங்களுக்கான உரிமைகளை செலுத்துகின்றோமா என்று நமக்குத் தெரிந்துவிடும். அன்னார் கூறுகிறார்கள்: இந்த விஷயங்களைப் பற்றி முழுவதுமாக தெரிந்து கொள்ளாத வரை, இறையச்சம் என்றால் என்ன என்பது தெரியவே முடியாது. அறிவைப் பெற வேண்டியது அவசியமாகும். ஏனென்றால் அறிவின்றி எவ்விஷயத்தையும் பெற முடியாது. அதனை மனிதன் அடையவே முடியாது.

**அன்னார் கூறுகிறார்கள்:** அல்லாஹுத் தஆலாவிற்கான உரிமைகள் யாவை? அடியார்களின் உரிமைகள் யாவை? எந்த விஷயங்களில் இருந்து அல்லாஹுத் தஆலா தடுத்துள்ளான்? எந்த விஷயங்களை செய்யுமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான் என்பது பற்றிய அறிவைப் பெறுவதற்காக, மீண்டும் மீண்டும் திருக்குர்ஆனை ஓதுங்கள். **அன்னார் கூறுகிறார்கள்:** "நீங்கள் திருக்குர்ஆனை ஓதும் போது, தீய செயல்களின் விவரங்களை எழுதிக் கொண்டே செல்ல வேண்டும். பிறகு, இறைவனின் அருள் மற்றும் உதவியால் இந்தத் தீமைகளில் இருந்து விலகியிருக்க முயற்சி செய்யுங்கள்."

ஆக இந்த ரமலானில் நாம் திருக்குர்ஆனையும் ஓதுகின்றோம். பொதுவாகத் திருக்குர்ஆன் ஓதுவதன் பால் அதிக கவனம் இருக்கின்றது. எனவே, செய்யுமாறு கூறப்பட்டுள்ள இதன் கட்டளைகள் பற்றியும், தடுக்கப்பட்டுள்ள கட்டளைகளைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். அத்துடன் தீய செயல்களை விட்டுவிட வேண்டும், நல்ல செயல்களை செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் ஓத வேண்டும். **அன்னார் கூறுகிறார்கள்:** திருக்குர்ஆனில் ஆரம்பம் முதல் இறுதிவரை செய்யுமாறு கூறப்பட்டுள்ள கட்டளைகள், தடுக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் இறை கட்டளைகளின் விளக்கங்கள் இருக்கின்றன.

**அன்னார் இந்த விஷயத்தை மிகவும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்:** மனிதன் எப்போது வரை இறையச்சம் உடையவனாக ஆவது இல்லையோ அவனது வணக்கங்களிலும் துஆக்களிலும் ஏற்றுக்கொள்ளப்படுதலின் நிலை உருவாவதில்லை. ஏனென்றால், அல்லாஹுத் தஆலா இவ்வாறு கூறியுள்ளான்: اِنَّمَا يَتَقَبَّلُ اللّٰهُ مِنَ الْمُتَّقِيْنَ (அல்மாயிதா: 28) அதாவது, சந்தேகமின்றி அல்லாஹுத் தஆலா இறையச்சம் உடையவர்களின் வணக்கங்களையே ஏற்றுக் கொள்கின்றான். **அன்னார் கூறுகின்றார்கள்:** இறையச்சம் உடையவர்களின் தொழுகை மற்றும் நோன்புகளுமே ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்பது உண்மையான விஷயம் ஆகும்.

**இறை வணக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படுதல் மற்றும் அதன் பொருள் யாது?** இதற்கான பதில் யாதெனில், நாம் தொழுகை ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று கூறும் போது அதன் பொருள், தொழுகையின் தாக்கங்கள் மற்றும் அருள்கள் தொழுகையாளிகளிடத்தில் உருவாகி விட்டது என்பதே ஆகும். எப்போதுவரை அந்த அருள்கள் மற்றும் தாக்கங்கள் உருவாகவில்லையோ அப்போது வரை முட்டி மோதுதல் மட்டுமேயாகும் என்று அன்னார் கூறுகிறார்கள். எனவே நமது ரமலான், நமது நோன்புகள் நம்மை இந்தத் தரத்திற்கு கொண்டு செல்ல முயற்சி செய்கின்றனவா என்பதை நாம் பார்க்க வேண்டும். **அன்னார் கூறுகிறார்கள்:** “ஆக, நம்பிக்கையாளராக ஆக விரும்பும் அந்த மனிதனுக்கு ஏற்படுகின்ற முதல் கடினம் மற்றும் இலக்கு யாதெனில், தீய செயல்களில் இருந்து விலகி இருப்பதே ஆகும். மேலும் இதன் பெயர் இறையச்சம் ஆகும்.”

எனவே நமது வணக்கங்கள், நமது தொழுகைகள், நமது திருக்குர்ஆன் ஓதுதல் ஆகியவை நம்மிடத்தில் செயல் ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தவில்லை என்றால், நோன்புகளின் நோக்கமாக இருக்கும் இறையச்சத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்யவில்லை என்றால், நாம் நமது நோன்புகளின் நோக்கத்தை முழுமை படுத்துவதில்லை. எதனைக் குறித்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நோன்பு கேடயமாகும் என்று கூறியிருக்கின்றார்களோ நாம் அந்தக் கேடயத்தைப் பற்றி பேசி இருக்கின்றோம்தான். ஆனால், அந்தக் கேடயத்தைப் பயன்படுத்தும் வழி முறையை நாம் கற்க முயற்சி செய்யவில்லை. நாம் ஸஹ்ரீ மற்றும் இஃப்தாரீக்கான ஏற்பாட்டையோ செய்துள்ளோம். ஆனால் நாம் ஸஹ்ரீ மற்றும் இஃப்தாரீ உண்பதன் நோக்கத்தை நிறைவேற்றவில்லை. நாம் நாள் முழுவதும் உண்ணாமலும் குடிக்காமலும் கழித்து விட்டோம்தான். ஆனால் நாம் பசியின் நோக்கத்தை முழுமைப்படுத்தவில்லை! அது இறையச்சத்தால் முழுமை பெறுகின்றது. மேலும் நம்மில் எந்த இறையச்சம் உருவாகி இருக்க வேண்டுமோ அது உருவானதா, இல்லையா என்று நம்மை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

*மேற்கொண்டு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது இறையச்சம் தொடர்பான மேலும் சில மேற்கோள்களையும் எடுத்துக் கூறினார்கள்.* அதிலிருந்து அசல் இறையச்சம் என்றால் என்ன? எவ்வகையான இறையச்சத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மில் உருவாக்க நாடுகிறார்கள் என்பது குறித்து நமக்கு வழிகாட்டல் கிடைக்கின்றது.

எந்த உண்மையான இறையச்சத்தால் மனிதன் தூய்மை ஆக்கப்படுகின்றானோ, அடைகின்றானோ எதற்காக நபிமார்கள் வருகை தருகிறார்களோ அந்த இறையச்சம் உலகில் இருந்தும் சென்று விட்டது. قَدْ اَفْلَحَ مَنْ زَكّٰهَا என்பதற்கு ஏற்ப எவராவது இருக்கலாம். அதாவது, எவர் தூய்மையை மேற்கொண்டாரோ அவர் நோக்கத்தை

அடைந்து விட்டார். பரிசுத்தமும் தூய்மையும் மேன்மையான விஷயங்களாகும். **மனிதன் தூயவன் ஆகவும் பரிசுத்தமானவன் ஆகவும் இருந்தால், வானவர்கள் அவனைக் கட்டித் தழுவுகின்றார்கள்.**

மக்களிடம் இதற்கு மதிப்பு இல்லை. இல்லாவிடில் அவர்களது இன்பங்களுக்கான ஒவ்வொரு விஷயமும் ஆகுமான காரணிகளால் அவர்களுக்குக் கிடைத்திருக்கும். திருடன் செல்வம் கிடைக்க வேண்டும் என்று திருடுகிறான். ஆனால் அவன் பொறுமையை மேற்கொண்டால், இறைவன் அவனை வேறு வழிகளில் இருந்து செல்வந்தனாக ஆக்கிவிடுவான். மேலும், இந்தத் திருட்டு என்பது, வெளிப்படையான திருட்டு மட்டுமல்ல. சில வியாபாரிகளும் தங்களது தவறான பொருள்களை விற்பனை செய்கிறார்கள். அவையும் இதே வகையில் வந்து விடுகின்றன. மனிதனது உள்ளத்தில் இருந்து ஈமான் வெளியேரும்போதுதான் இவ்வகையான செயல்கள் ஏற்படுகின்றன.

**அன்னார் கூறுகிறார்கள்:** எவ்வாறு ஆட்டின் தலைக்கு அருகில் சிங்கம் நிற்கின்ற போது அது புல்லையும் உண்ண முடியாதோ அதே போன்றாகும். ஆக ஆடு அளவுக்கு ஈமான் கூட மக்களிடம் இருப்பதில்லையா? பாவங்கள் மற்றும் தீமைகளை செய்யும்போது மனிதனுக்கு **இறைவன் நம்மை எந்நேரமும் பார்த்துக் கொண்டிருக்கின்றான்** என்ற உணர்வு ஏற்பட வேண்டும். **அன்னார் கூறுகிறார்கள்:** மூல வேர் மற்றும் நோக்கம் இறையச்சமே ஆகும். எவருக்கு அது கிடைக்கப் பெற்றதோ அவர் அனைத்தையும் அடைய முடியும். அது இல்லாமல், மனிதன் சிறிய பாவங்களிலிருந்தும் பெரிய பாவங்களிலிருந்தும் தவிர்த்திருப்பது சாத்தியமற்றதாகும்.

**எல்லா விஷயங்களும் இறையச்சத்தாலேயே ஆகும்.** திருக்குர்ஆன் இதிலிருந்தே ஆரம்பித்திருக்கின்றது. اِيَّاكَ نَعۡبُدُ وَاِيَّاكَ نَسۡتَعِيۡنُ என்பதன் பொருளும் இறையச்சம் ஆகும். மனிதன் அமல் செய்தாலும் அச்சத்தால், அதனை தான் செய்ததாகக் கூறும் தைரியம் அவனுக்கு இல்லை. மேலும் அல்லாஹ் தஆலாவிடம் உதவி கேட்கின்றான். பிறகு இரண்டாவது அதிகாரமும் هُدًى لِّلۡمُتَّقِيۡنَۙ என்பதிலிருந்து ஆரம்பிக்கின்றது. தொழுகை, நோன்பு, ஸகாத் ஆகியவை மனிதன் இறையச்சம் உடையவனாக இருக்கும்போதுதான் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அச்சமயம் பாவத்தின் பக்கம் அழைக்கக்கூடிய எல்லா விஷயங்களையும் அல்லாஹுத்தஆலா விலக்கி வைத்து விடுகின்றான். இறையச்சம் உடையவராக இருந்தால், மனைவியின் தேவை இருக்கும்போது மனைவியை வழங்குகின்றான். மருந்தின் தேவை இருக்கும்போது மருந்தை வழங்குகின்றான். எந்தப் பொருள் தேவைப்படுகின்றதோ அதனை வழங்குகின்றான். மேலும் அவன் அறிந்திராத இடத்திலிருந்து அவனுக்கு ரிஸ்க்கை வழங்குகின்றான்.

**மேலும் கூறுகிறார்கள்:** இந்தக் கோட்பாட்டை எப்போதும் கருத்தில் கொள்ளுங்கள். நம்பிக்கையாளரின் பணியானது, அவருக்கு ஏதேனும் வெற்றி வழங்கப்பட்டால், நான் இதற்கு தகுந்தவனாக இருக்கவில்லை. அல்லாஹுத் தஆலாவின் அருளே அனைத்தையும் வழங்கியிருக்கின்றது என்று வெட்கப்படுகிறார். மேலும், இந்த உணர்வு ஏற்படும்போது பிறகு இறைவனின் புகழ் பாடுகின்றார். மேலும் இவ்வாறாக அவர் முன்னே அடி எடுத்து வைக்கின்றார். மேலும் எல்லாவித சோதனைகளிலும் நிலைத்திருந்து ஈமானைப் பெறுகின்றார். **அன்னார் கூறுகின்றார்கள்:** உண்மையான முஃமின் எல்லா விஷயங்களையும் அல்லாஹுத்தஆலாவின் அருளைச் சார்ந்ததாக ஆக்கும் போது, பிறகு அவர் மீது அருள்களின் கதவுகள் திறந்து கொண்டே செல்கின்றன. மேலும் இவ்வாறாக ஒவ்வொரு வெற்றிக்குப் பிறகும்

இறைவனுடனான அவரது ஒரு புது தொடர்பு ஆரம்பித்து விடுகின்றது. மேலும் அதில் மாற்றம் தோன்ற ஆரம்பிக்கிறது. اِنَّ اللّٰهَ مَعَ الَّذِيْنَ اتَّقَوْا இறைவன் இறையச்சம் உடையவர்களுடன் இருக்கின்றான்.

அன்னார் கூறுகிறார்கள்: **இறையச்சத்தின் தாக்கமானது, இதே உலகில் இறையச்சம் உடையவர் மீது ஆரம்பமாகி விடுகின்றது.** இது கடன் ஒன்றும் கிடையாது ரொக்கமாகும். மாறாக எவ்வாறு விஷத்தின் தாக்கமும், விஷமுறிவின் தாக்கமும் உடனடியாக உடலில் ஏற்படுகின்றதோ அதேபோன்று இறையச்சத்தின் தாக்கமும் ஏற்படுகின்றது. எனவே நல்ல விஷயங்களை செய்தும் இறைவணக்கங்களை செய்தும் நன்மைகளை ஆற்றிய பிறகும் மனிதனது நிலையில் தாக்கம் ஏற்படவில்லை என்றால், பிறகு கவலைக்குரிய விஷயமாகும்.

**அன்னார் கூறுகின்றார்கள்:** எப்போது வரை உண்மையாகவே மனிதன் மீது பல மரணங்கள் வருவதில்லையோ அவர் இறையச்சம் உடையவராக ஆவதில்லை... எல்லாப் புறத்தை விட்டும் கண்களை மூடியவாறு முதலில் இறையச்சத்தின் படித்தரங்களைக் கடந்து செல்லுங்கள். எத்தனை நபிமார்கள் வருகை தந்தார்களோ அவர்கள் அனைவரது நோக்கமும் இறையச்சத்தின் வழியினைக் கற்பிப்பதாகவே இருந்தது. اِنْ اَوْلِيَآؤُهٗٓ اِلَّا الْمُتَّقُوْنَ (அல்அன்ஃபால்: 35). ஆனால், திருக்குர்ஆன் இறையச்சத்தின் மெல்லிய வழிகளைக் கற்பித்திருக்கின்றது... நமது போதனையின் சுருக்கம் யாதெனில், மனிதன் தனது அனைத்து ஆற்றல்களையும் இறைவன் புறமே செலவழிக்க வேண்டும்.

*இரண்டாவது குத்பாவுக்கு முன் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* பல்வேறு வகையிலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு இறையச்சத்தின் பொருள் மற்றும் அதன் ஆழத்தையும் தெரிந்து கொள்வதற்காக அறிவுரை கூறியவற்றுள் சில மேற்கோள்களை எடுத்து வைத்துள்ளேன். மேலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போன்று, நாம் அன்னாரது ஜமாஅத்தில் இணைந்துகொண்டு இறையச்சத்தின் உண்மையான உயிரோட்டத்தைப் புரிந்தவாறு, அதன்படி நடப்பவர்களாகவும் இருக்க வேண்டும். ரமலானின் இந்த எஞ்சிய நாள்களில் இயன்ற அளவு நாம் இறையச்சத்தின் உண்மையை உணர்ந்தவர்களாக அல்லாஹ்விற்கான உரிமைகள் மற்றும் அடியார்களுக்கான உரிமைகள் ஆகியவற்றை செலுத்துபவர்களாக ஆக முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹுத் தஆலா நமக்கு இதற்கான நல்வாய்ப்பைத் தருவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ الله رحمكم الله اِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மௌலவி சுல்தான் மைதீன்)